கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
Ministry of Education, Cultural Affairs & Sports
Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com
எனது இல. My No. உமது இல. Your No. திகதி Date

வட மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் - 2012

- பதிலீட்டு இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர்கள் எண்ணிக்கை - 288
- வருடாந்த இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் எண்ணிக்கை - 335

**பதிலீட்டு இடமாற்றம்**

கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மடு, தீவகம் ஆகிய வலயங்களில் ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளதால், அவ்வலயங்களிலிருந்து யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றத்தில் வரும் ஆசிரியர்களுக்கு பதிலீடு வழங்கவேண்டிய தேவை அவசியமாகவுள்ளது.

மேலும் ஆசிரியப்பரம்பலைச் சீராக்கம் செய்வதன் பொருட்டு யாழ் மாவட்டத்தின் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலயங்களில் மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை பற்றாக்குறையுள்ள வன்னி மற்றும் தீவக வலயங்களுக்கு இடமாற்றம் வழங்குவற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு, 30.11.2011, 03.01.2012 ஆந் திகதிகளில் யாழ் பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் வட மாகாண கௌரவ ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகள், (இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்) ஆகியோருடன் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இவ்விடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைவாக ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளடங்கலான வலய இடமாற்றச்சபையின் சிபார்சுடன் பொருத்தமான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பட்டியல் வலயங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. இவர்களில் மேன்முறையீடு செய்த ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் வலய மேன்முறையீட்டுச் சபையால் பரிசீலனை செய்யப்பட்டு தகுந்த காரணங்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேன்முறையீட்டின் பின்னரான பட்டியல் வலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் அப்பட்டியல் வலய இடமாற்றச்சபையின் சிபார்சுடன் மாகாணக்கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் பின்னர் கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகள், கௌரவ ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டுச்சபையால் (Filter Board) பரிசீலனை செய்யப்பட்டு தகுந்த காரணங்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேன்முறையீட்டுச்சபையின் பரிசீலணையின் பின்னர் இவ்விடமாற்றத்துக்காக தெரிவு செய்யப்பட்ட தகுதி பெற்ற 288 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான அனுமதி கௌரவ ஆளுநர் அவர்களினால் வழங்கப்பட்டு இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ்விடமாற்றம் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

- இடமாற்ற நடைமுறைத் திகதி - 01.03.2012
- தீவக வலயத்திற்கான இடமாற்றக்காலம் - 3 வருடங்கள்
- ஏனைய மாவட்டங்களுக்கான இடமாற்றக்காலம் - 2 வருடங்கள்

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் 15.03.2012 ஆந் திகதிக்கு முன்னர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள வலயத்தில் கடமையைப்பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும்.

15.03.2012 ஆந் திகதிக்கு முன்னர் கடமையைப் பொறுப்பேற்காத ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும்.

இவ்விடமாற்றம் தொடர்பாக எதுவித மேன்முறையீடுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

**வலய இடமாற்றச்சபை ( Zonal Transfer Board)**

தலைவர் - வலயக்கல்விப் பணிப்பாளர்

அங்கத்தவர்கள்: பிரதிக்கல்விப் பணிப்பாளர்( நிர்வாகம்)

பிரதிக்கல்விப் பணிப்பாளர்( திட்டமிடல்)

நிர்வாக உத்தியோகத்தர்

கோட்டக்கல்வி அலுவலர்கள்

இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி

**மேன்முறையீட்டுச்சபை (Filter Board)**

| **இல** | **பெயர்** | **பதவி** | **உறுப்பினர்** |
|---|---|---|---|
| 01 | திரு.ப.விக்னேஸ்வரன் | மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம் | தலைவர் |
| 02 | திரு.ஜே.எக்ஸ்.செல்வநாயகம். | உதவிச் செயலாளர், ஆளுநர் செயலகம், வட மாகாணம் | அங்கத்தவர் |
| 03 | திரு.க.சிவகரன் | உதவிச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வடமாகாணம் | அங்கத்தவர் |
| 04 | திரு.தே.செந்தூரன் | இலங்கை ஆசிரியர் சங்கப்பிரதிநிதி | அங்கத்தவர் |
| 05 | திரு.சரா புவனேஸ்வரன் | இலங்கைத் தமிழர் ஆசியர் சங்கப் பொதுச் செயலாளர் | அங்கத்தவர் |

சி.சத்தியசீலன்,

செயலாளர்.